www.Padasalai.Net www.TrbTnpsc.com

# முதல் திருப்புதல் தேர்வு - 2025

தேர்வு எண்

காலம் : 3.00 மணி **XII - வணிகவியல்** மதிப்பெண் : 90

## பகுதி-1

குறிப்பு: 1) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். (20×1=20)

2) ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. வேலையை பல்வேறு சிறுபணிகளாக பிரிப்பதை ——— என்பர்
அ) ஒழுங்கு ஆ) பயன்பாடு இ) வேலைப்பகிர்வு ஈ) சமத்துவம்

2. குறியிலக்கு மேலாண்மையானது ——— என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது
அ) பேராசிரியர்ரெட்டின் ஆ) ஜார்ஜ்ஒடியோர்ன்
இ) ஹென்றிபயோல் ஈ) எப்.டபிள்யூ.டெய்லர்

3. பங்குகளை இந்தியா முழுவதும் மின்னனு மூலம் வியாபாரம் செய்யும் நோக்கத்தோடு முதன்மை நிதிநிறுவனங்களால் உருவாக்கப்பட்டது ——— ஆகும்
அ) இந்திய உடனடி பங்குமாற்றகம் ஆ) ஏட்டுக்கடன்
இ) பரஸ்பரநிதி ஈ) துணிகரமுதல்

4. பணச்சந்தையில் முக்கிய பங்காற்றும் அமைப்பு ———
அ) வணிகவங்கி ஆ) இந்திய ரிசர்வ் வங்கி
இ) பாரத ஸ்டேட் வங்கி ஈ) மையவங்கி

5. நம்பிக்கையுள்ள வணிகர் என்பவர்?
அ) காளை ஆ) கரடி இ) மான் ஈ) முடவாத்து

6. தேசிய பங்குச்சந்தையில் புறத்தோற்றமற்ற பத்திர வர்த்தகம் தொடங்கிய ஆண்டு ——— ஆகும்
அ) ஜனவரி 1996 ஆ) ஜூன் 1998 இ) டிசம்பர் 1996 ஈ) டிசம்பர் 1998

7. மனிதவளம் என்பது ஒரு ——— சொத்து
அ) கண்ணுக்குபுலனாகும் ஆ) கண்ணுக்கு புலனாகா
இ) தேர்வு ஈ) ஆட்சேர்ப்பு

8. ——— ஊழியர்களின் திறமை குறைபாடுகளைத் தடுக்க உதவுகிறது
அ) பயிற்சி ஆ) வேலைப் பகிர்வு இ) தேர்வு ஈ) ஆட்சேர்ப்பு

9. உடனடிசந்தை எதன் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டுள்ளது
அ) பொருட்கள் ஆ) பரிவர்த்தனை இ) ஒழுங்குமுறை ஈ) காலம்

10. சந்தையிடுகை கலவை என்பது சந்தையிடுகை திட்டமிடல் மூலம் நிறுவனத்தின் குறிக்கோள்கள் ——— தேவை மற்றும் மன நிறைவு மூலம் லாபம் பெறுகிறது
அ) மொத்த விற்பனையாளர் ஆ) சில்லறை விற்பனையாளர்
இ) நுகர்வோர் ஈ) விற்பனையாளர்

11. நுகர்வோர் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த ஒவ்வொரு ஆண்டும் ——— நுகர்வோர் பாதுகாப்பு தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது
அ) ஆகஸ்ட் 15 ஆ) ஏப்ரல் 15 இ) மார்ச் 15 ஈ) செப்டம்பர் 15

12. நவீன சந்தையியலின் இறுதியான நோக்கம் ———
அ) அதிகமான இலாபம் ஆ) குறைவான இலாபம்
இ) நுகர்வோர் திருப்தி ஈ) சமுதாயத்திற்கு சேவை

13. VUCA —— —— —— ——
அ) மதிப்பு நிச்சயமின்மை சிக்கலானது தெளிவில்லாதது
ஆ) மதிப்பு தவிர்க்க இயலாதது நிறும மற்றும் அதிகாரம்
இ) மாற்றம் கட்டுபாட்டிற்கு அப்பாற்ப்பட்டது நிறுமம்
ஈ) மேற்கூறிய அனைத்தும்

14. புதிய பொருளாதாரக் கொள்கை ——— ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது?
அ) 1980 ஆ) 1991 இ) 2013 ஈ) 2015

15. சரக்கு விற்பனைச் சட்டத்தில் எது சரக்கு என்ற பொருளில் உள்ளடங்காதது
அ) சரக்கிருப்பு ஆ) வரவேண்டிய பங்காதயம் இ) பயிர் ஈ) தண்ணீர்

16. மாற்றுமுறை ஆவணச் சட்டம் 1881 பிரிவு-6 எதைப் பற்றி இயம்புகிறது?
அ) கடனுறுதிச் சீட்டு ஆ) மாற்றுச் சீட்டு இ) காசோலை ஈ) பங்குகள்



Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

17. ***கீழ்க்காண்பவைகளில் தவறான இணையைக் கண்டறிக***
அ) SIDO - சிறுதொழில் வளர்ச்சி அமைப்பு
ஆ) NABARD - இந்திய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி
இ) SEWA - சுய தொழில் ஈடுபட்டுள்ள மகளிர் சங்கம்
ஈ) AWAKE - கர்நாடக பெண்கள் தொழில் முனைவோர்

18. வணிக தொழில் முனைவோரைச் சாராத பணியைக் கண்டறி
அ) விற்பனை ஆ) கழிவு இ) வாங்கல் ஈ) தயாரிப்பு

19. நிறுமத்தை கலைக்கும் போது அல்லது சொத்துக்களை விற்று நீர்மைத் தன்மை ஆக்கும் போது பெற கூடிய பங்குகள் ———
அ) மீள்தகு முன்னுரிமைப் பங்குகள் ஆ) மீள்தகா முன்னுரிமைப் பங்குகள்
இ) மாற்றக் கூடிய முன்னுரிமைப் பங்குகள்
ஈ) மாற்ற முடியாத முன்னுரிமைப் பங்குகள்

20. நிறுமச் சட்டம் 2013 இன்படி ஒருநபர் இயக்குநகராக ——— நிறுமங்களுக்கு மேல் பதவிவகிக்கக் கூடாது
அ) 5 நிறுமம் ஆ) 10 நிறுமம் இ) 20 நிறுமம் ஈ) 15 நிறுமம்

## பகுதி-2

***குறிப்பு: ஏதேனும் 7 வினாவிற்கு விடையளி. (கட்டாய வினா 30)*** ***(7x2=14)***

21. மேலாண்மைக் கருவிகளைப் பட்டியலிடுக.
22. OTCEI - சிறுகுறிப்பு வரைக.
23. பங்குச் சந்தை என்றால் என்ன?
24. தேர்வுச் சோதனையின் வகைகள் யாவை?
25. தரப்படுத்துதல் என்றால் என்ன?
26. ஜான் F.கென்னடி கூறிய நுகர்வோர் உரிமைகள் யாவை?
27. புதிய பொருளாதாரக் கொள்கைகளின் கிளைகளை எழுதுக.
28. தொழில் முனைவோரின் சிறப்பியல்புகளை பட்டியலிடுக.
29. வாங்குவோர் ஜாக்ரதை என்றால் என்ன?
30. சாதாரண தீர்மான நிறைவேற்ற ஏதேனும் 4 சூழ்நிலைகளை கூறுக.

## பகுதி-3

***குறிப்பு: ஏதேனும் 7 வினாவிற்கு விடையளி. (கட்டாய வினா 40)*** ***(7x3=21)***

31. மேலாண்மை - வரைவிலக்கணம் தருக.
32. பணிச் சந்தையில் ஈடுபடும் பங்கேற்பாளர்கள் யாவர்?
33. மான் மற்றும் முடவாத்து விளக்குக.
34. மனிதவள மேலாண்மையின் வரைவிலக்கணம் தருக.
35. மின் சந்தையிடுதலின் நோக்கங்கள் யாவை?
36. செயற்கை பற்றாக்குறை என்றால் என்ன?
37. தேசிய ஆணையத்தின் உறுப்பினர்கள் பற்றி விவரி.
38. உலகமயமாக்கலின் ஏதேனும் 3 தாக்கங்களை எழுதுக.
39. மாற்று முறை ஆவணம் மற்றும் உரிமை மாற்றம் இவைகளை வேறுபடுத்துக.
40. மத்திய மற்றும் மாநில அரசு மேற்கொண்டுள்ள மகளிர் தொழில்முனைவோருக்கான ஏதேனும் 3 திட்டங்களை தருக.

## பகுதி-4

***குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.*** ***(7x5=35)***

41. அ) நவீன மேலாண்மைக் கோட்பாடுகள் விவரிக்கவும். ***(அல்லது)***
ஆ) பல்வேறு கூட்டங்களை விளக்குக.

42. அ) விதிவிலக்கு மேலாண்மையின் நன்மைகள் யாவை? ***(அல்லது)***
ஆ) ஏதேனும் 5 அரசின் தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தினை விளக்குக.

43. அ) பணச்சந்தை மற்றும் மூலதன சந்தை இரண்டிற்கும் இடையிலான வேறுபாடுகளை விவரி. ***(அல்லது)***
ஆ) மகளிர் தொழில்முனைவோர் சந்திக்கும் பிரச்சினைகளை விவரி.

44. அ) அகவன ஆட்சேர்ப்பு முறையிலுள்ள அகவனங்களை விளக்குக. ***(அல்லது)***
ஆ) காசோலை மற்றும் மாற்றுச் சீட்டினை வேறுபடுத்துக.

45. அ) சந்தையை எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது? ***(அல்லது)***
ஆ) வியாபாரத்தின் பரந்த சூழலின் பங்கு பற்றி விவரி.

46. அ) நவீன சந்தையிடுதல் ஏதேனும் 2 முறைளை விளக்குக. ***(அல்லது)***
ஆ) தாராளமயமாக்கல் நன்மைகள் மற்றும் குறைபாடுகளை பற்றி விளக்குக.

47. அ) நுகர்வோர் எவ்வாறு சுரண்டப்படுகிறார்கள்? ***(அல்லது)***
ஆ) நுகர்வோரின் பொறுப்புகள் யாவை?



Scanned with OKEN Scanner

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com